நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வானூர்

முன்னிலை:- திருமதி.N.பீரித்தி, B.A.,B.L.

குற்றவியல் நீதித்துறை நடுவர், வானூர்.

2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 30-ம் நாள் திங்கட்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 381/2025

C.N.R.No.TNVP 36-002379-2025

அரசுக்காக.
காவல் ஆய்வாளர்,
கோட்டக்குப்பம் மதுவிலக்கு அமல் பிரிவு,
குற்ற எண்.134/2025 .... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

| | |
|---|---|
| எதிரி.1 | மணிவண்ணன் (37/2025) த/பெ.மன்னார், செம்மஞ்சேரி கிராமம், காஞ்சிபுரம் மாவட்டம் |
| ஏதிரி.2 | ரஞ்சித்குமார் (20/2025) த/பெ.முருகன், கெங்கம்பூண்டி கிராமம், திருமணி, திருவண்ணாமலை மாவட்டம் |

...... எதிரிகள்

CASE SUMMARY

| S.No. | Particulars | Report |
|---|---|---|
| 1. | The period of remand of the accused | Accused Remanded on 20-04-2025 and Released on Bail 02-05-2025 |
| 2. | The date of filing of the complaint/final report in the Court | Date of filing final report on 19-08-2025 Taken Cognizance on 19-08-2025 |
| 3. | The date of committal of the case to the Court of Session | Not Applicable |
| 4. | The date of 1st questioning of the accused under Sections 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | Accused questioned on 03-03-2026 |
| 5. | Filing of all miscellaneous petitions and their results including the results on challange before superior | Nil |

| | | |
|---|---|---|
| | courts: except routine petitions like petitions under section 317 of the Code: | |
| 6. | Date of examination in – Chief and cross – Examination of a Witness | P.W.1 - Chief and Cross examined on 18-03-2026<br>P.W.2 - Chief and Cross examined on 26-03-2026 |
| 7. | Date of examination of the accused U/Sec.313 of the Code | 26-03-2026 |
| 8. | Details of abscondence of an accused and his appearance / production, as the case may be ; and NBW pending/recalled | Nil |
| 9. | Grant of stay by superior Courts and the results thereof | Nil |

இவ்வழக்கு 19/08/2025 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அது முதல் இந்நீதிமன்றத்தில் கவனமாக பரிசீலனையில் இருந்து வந்து குற்றம் முறையிடுவோர் தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர் திரு.ராஜசேகர் நிலை 1 அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.காத்தவராயன் அவர்கள் முன்னிலையாகி இறுதி விசாரணைக்கு வந்து இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்து ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

## <u>தீர்ப்புரை</u>

<u>அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிக்கையின் சுருக்கம்</u>

கடந்த 20/04/2025ம் தேதி 11:00 மணிக்கு கேணிப்பட்டு பேருந்து நிறுத்தத்தில் போலீஸ் பார்ட்டி சகிதம் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது TN-97-V-7952 என்ற எண் கொண்ட Hero Splender Plus இருசக்கர வாகனத்தில் சந்தேகத்திற்கிடமாக வந்த இவ்வழக்கின் 1, 2 எதிரிகள் இருவரும் பாண்டிச்சேரி மாநில மதுபானங்களான Super Select Brandy 180 ML – 100 Nos பாட்டில்களை வைத்துக்கொண்டும் இதில் 3 பாட்டில்கள் மட்டும்

திறந்து மூடிய நிலையில் வைத்துக்கொண்டு எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இன்றி அந்நிய மாநில மதுபானங்களை தனது சுயலாபத்திற்காக விற்பனை செய்வதற்காக இருசக்கர வாகனத்தில் கடத்தி வந்ததாக 1, 2 எதிரிகள் மீது கோட்டக்குப்பம் மதுவிலக்கு அமல்பிரிவு காவல் நிலைய ஆய்வாளர் U/s.4(1)(a), r/w 4(1)(C), 4(1)(h), 4(1)(A), 14(A) Tamilnadu Prohibition Amendment Act 2024-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கின் எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையான பிறகு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் நகல்களும் BNSS 230 பிரிவின் கீழ் முறையாக இலவசமாக வழங்கப்பட்டது.

3) எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு, எதிரிகளிடம் குற்றம் பற்றி வினவியபோது, எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று குற்றத்தினை மறுத்தனர். எனவே இருதரப்பும் கேட்கப்பட்டும் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனைவதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்த காரணத்தினால், எதிரிகள் மீது பிரிவுகள் 4(1)(a) r/w.4(1)(C), 4(1)(h) r/w.4(1)(A), 14(A) Tamilnadu Prohibition Amendment Act 2024-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி கூறி வினவியபோதும், எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்காட விருப்பம் தெரிவித்தனர். எனவே, அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4) அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அதில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரை குறியீடு

செய்யப்பட்டுள்ளன. பட்டியல் சாட்சிகளில் தலைமை காவலர்(2058) பாண்டியன் என்பவர் விசாரிக்காமல் விலக்கி கொள்ளபட்டார். அரசு தரப்பில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சான்று பொருள் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணம் மற்றும் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-</u>

20/04/2025ம் தேதி காலை 11:00 மணிக்கு கோட்டக்குப்பம் மதுவிலக்கு அமல் பிரிவு ஆய்வாளர் திருமதி.மீனா என்பவருடன் தலைமை காவலர்கள் திரு.பாண்டியன்(2058) மற்றும் திரு.பாண்டியன்(1962) ஆகியோர்கள் மதுவிலக்கு வழக்கு சம்மந்தமாக கேணிப்பட்டு பேருந்தம் நிறுத்தம் அருகே கண்காணித்து கொண்டிருந்தபோது கிளியனூர் நோக்கி சந்தேகத்திற்கிடமாக வந்த TN-97-V-7952 என்ற எண் கொண்ட Hero Splendor Plus இருசக்கர வாகனத்தை எதிரி மணிவண்ணன் ஓட்டிக்கொண்டும் எதிரி ரஞ்சித்குமார் பின்னால் உட்கார்ந்த வந்தவர்களை சோதனை செய்தபோது பாண்டிச்சேரி மதுபான பாட்டில்களான Super Select Brandy 180 ML – 100 Nos பாட்டில்களை வைத்துக்கொண்டும் இதில் 3 பாட்டில்கள் மட்டும் திறந்து மூடிய நிலையில் இருந்த பாட்டில்கள் எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இல்லாமல் வைத்திருந்த எதிரிகளை கைது செய்து தலைமை காவலர்கள் பாண்டியன்(1962) மற்றும் பாண்டியன்(2058) என்பவர்கள் முன்னிலையில் மேற்படி இருசக்கர வாகனத்தையும் (சா.பொ.1) Super Select Brandy 180 ML – 100 Nos. பாட்டில்கள் (புகைப்படம் அ.சா.ஆ.2) எதிரிகளிடமிருந்து கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 தயார் செய்தார். பின்னர் நிலையம் வந்து எதிரிகள் மீது நிலையக்குற்ற எண்.134/2025 பிரிவுகள் 4(1)(a), 4(1)(C), 4(1)

(h), 4(1)(A), 14(A) Tamilnadu Prohibition Amendment Act 2024-ன் படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 பதிவு செய்தார். பின்னர் சாட்சிகள் தலைமை காவலர்கள் பாண்டியன் (1962) மற்றும் பாண்டியன் (2058) ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். அன்றைய தினமே எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். மேற்படி மதுபாட்டில்கள் மற்றும் வாகனத்தை படிவம் 91 மூலம் முறையே அசா.ஆ.4 மற்றும் அசா.ஆ.5 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 4(1)(a) r/w.4(1)(C), 4(1)(h) r/w.4(1)(A), 14(A) Tamilnadu Prohibition Amendment Act 2024-ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

06) இவ்வழக்கில் திருமதி.மீனா காவல் ஆய்வாளர் அ.சா.1 ஆகவும், தலைமை காவலர் திரு.பாண்டியன் (1962) அ.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

07) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு சாட்சிய பகுதிகளை எடுத்துரைத்து BNSS 351(1)(b)ன் கீழ் சுட்டிக்காட்டி வினவியபோதும் எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகள் கூறுவதை மறுத்து, துங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் யாரும் இல்லை என்று கூறினர். இத்துடன் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

08) இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது. வழக்கின் ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

09) இவ்வழக்கில் தற்போது தீர்மானிக்கப்படவேண்யது யாதெனில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா என்பதேயாகும்?

10) காவல் ஆய்வாளர் திருமதி.மீனா அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில்

"கடந்த 20.04.2025 அன்று தான் கோட்டக்குப்பம் மதுவிலக்கு அமல்பிரிவு காவல் ஆய்வாளராக பணியிலிருந்தேன் என்றும் அப்போது தன் தலைமையில் த.கா.1962 பாண்டியன் மற்றும் த.கா.2055 பாண்டியன் ஆகியோருடன 11.00 மணிக்கு தனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி கேணிப்பட்டு பேருந்து நிறுத்தத்தில் வாகன சோதனை செய்துகொண்டிருந்தபோது கிளியனூர் நோக்கி வந்த டிஎன்.97 V 7952 என்ற பதிவெண் Hero Splendor plus இரு சக்கர வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தோம் என்றும், அந்த வாகனத்தை எதிரி மணிவண்ணன் ஓட்டி வந்தும், பின்னால் உட்கார்ந்து வந்தவர் ரஞ்சித்குமார் ஆவார்கள். அவர்கள் உடைமைகளை திறந்து காட்ட சொல்லி பார்த்தபோது அதில் பாண்டிச்சேரி மதுபான பாட்டில்களான Super Select Brandy 180ml- 100 Nos, பாட்டில்கள் இருந்தது. இதில் 3 பாட்டில்கள் மட்டும் மூடி திறந்து மூடிய நிலையில் இருந்தது என்றும், மேற்படி பாட்டில்கள் மற்றும் மேற்படி வாகனத்தை மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் தான் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன் என்றும், பின்பு தான் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்குசொத்துக்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.134/2025 பிரிவுகள் 4(1)(a), 4(1)(h) TNP Act, 4(1)(C), 4(1)(A), 14(A) TNP Amendment Act ன் படி எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும் சாட்சிகள் பாண்டியன் மற்றும் பாண்டியன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன் என்றும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களளான மதுபான பாட்டில்களை படிவம் 91மூலம் கணம் நீதிமன்றதிற்கு அனுப்பி வைத்தேன் என்றும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான டிஎன்.97 V 7952 என்ற பதிவெண் Hero Splendor plus படிவம் 91மூலம் கணம் நீதிமன்றதிற்கு அனுப்பி வைத்தேன் என்றும் எதிரிகள் தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்கள் என்றும்

மேற்படி டிஎன்.97 V 7952 என்ற பதிவெண் Hero Splendor plus வாகனம மனுவின் பேரில் இடைக்கால உத்தரவாக அதன் உரிமையாளர் நிபந்தனையின் பேரில் பெற்றுச்சென்றார் என்றும் பின்பு வழக்கினை முடித்து எதிரிகள் மீது 4(1)(a), 4(1)(h) 4(1)(C), 4(1)(A), 14(A) TNP Amendment ACt பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் அசா.பொ.1 பொறுத்தமட்டில் அரசுக்கு ஆதாயம் செய்யும் பொருட்டு மேற்கண்ட நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது'' என்று சாட்சியமளித்துள்ளார்.

11) இவ்வழக்கில் அ.சா.1டன் கண்காணிப்பு பணியில் உடன் இருந்ததாக அரசு தரப்பில் சொல்லப்படும் தலைமை காவலர் திரு.பாண்டியன்(1962) அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.2 அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்து சாட்சியமளித்துள்ளார்.

12) அ.சா.1 ஆன புலன் விசாரணை அதிகாரி அவரது குறுக்கு விசாரணையில் கேணிப்பட்டு சாலை அதிக வாகனங்கள் செல்லும் சாலை என்றால் சரிதான் என்றும், அந்த இடத்தில் தனிநபர்கள் யாரையும் சாட்சியாக தான் விசாரிக்கவில்லை என்றும், கைப்பற்றுதல் மகசரில் தனிநபர்கள் யாரையும் சாட்சியாக தான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான் என்றும், படிவம் 91ல் சாட்சிகளின் கையொப்பத்தில் சாட்சி1ன் கையொப்பம் இல்லை என்றால் சரிதான் என்று சாட்சியமளித்துள்ளார்.

13) அ.சா.2 அவரது குறுக்கு விசாரணையில் அ.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தை ஒத்து சாட்சியமளித்துள்ளார். மேலும் அவரது குறுக்கு விசாரணையில் படிவம் 91ல் தன் கையொப்பம் இல்லை என்றால் சரிதான் என்று சாட்சியமளித்துள்ளதிலிருந்து புலன் விசாரணை அதிகாரி எதிரிகளிடமிருந்து மதுபானங்களை கைப்பற்றினரா என்பது சந்தேகத்திற்குரியதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும்

இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரையும் புலன் விசாரணை அதிகாரி விசாரிக்கவில்லை என்பதும் புலனாகிறது. எதிரிகளிடமிருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றியதாக அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சியமளித்துள்ளபோதிலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 காவல் துறையை சேர்ந்தவர்கள் ஆவர். இந்நிலையில் கைப்பற்றுதல் மகசர் மற்றும் படிவம் 91ல் தனிநபர் சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்யாமலும், தனிநபர் சாட்சிகளை விசாரிக்காமலும் புலனாய்வு அதிகாரி மேற்கொண்ட புலனாய்வில் நம்பகத்தன்மையில் சந்தேகமே ஏற்படுகிறது.

14) இவ்வாறான சூழ்நிலையில் எதிரிகள் மதுபான பாட்டில்கள் கடத்தி சென்றார்களா என்பதிலும் ஐயம் நிலவுகிறது. எனவே புலனாய்வு அதிகாரி அவருக்கு புள்ளியியல் தேவைப்படுவதால் தவறான வழக்கை ஜோடித்துள்ளாரோ என்ற சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுகின்றது. மேலும் கைப்பற்றப்பட்ட சான்று பொருட்கள் எதிரிகளிடமிருந்துதான் கைப்பற்றப்பட்டது என்பதை உறுதியூட்டும் விதத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் விசாரிக்காதது இவ்வழக்கில் நம்பகதன்மையில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. எனவே, அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரிகள் மீதான குற்றங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை. இவ்வாறான சூழ்நிலைகளில் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக்கி எதிரிகளை இந்த வழக்கின் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15) எனவே எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் போதுமான சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>முடிவாக</u>

16) மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, அரசு தரப்பில் இவ்வழக்கினை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக முடிவு செய்து, எதிரிகள் மீது பிரிவு 4(1)(a), r/w 4(1)(C), 4(1)(h) r/w4(1)(A), 14(A) TNP Amendment Act-ன் கீழான குற்றச்சாட்டுக்களை ஐயம்திரிபற அரசு தரப்பு நிரூபிக்கவில்லை என தீர்மானித்து, எதிரிகளை மேற்சொன்ன பிரிவின் கீழ் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து எதிரிகளை BNSS பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17) இவ்வழக்கில் வழக்கு சொத்து எண்.112/2025-ல் உள்ள Majestic Super Select Brandy 180 ML – 100 Nos பாட்டில்களை வைத்துக்கொண்டும் இதில் 3 பாட்டில்கள் மட்டும் திறந்து மூடிய நிலையில் இருந்த மதுபானபாட்டில்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற W.P.No.6126/2020, 06.01.2020ன் அறிவுறுத்தலின் படி அழிக்கப்பட்டுள்ளது. வழக்கு சொத்து எண்.268/2025-ல் உள்ள TN-97-V-7952 என்ற எண் கொண்ட Hero Splendor plus இருசக்கர வாகனத்தை அதன் உரிமையாளர் மனுதாக்கல் செய்து இந்நீதிமன்ற Crl.M.P.No.402/2025 நாள் 10/06/2025 உத்தரவின்படி இடைக்காலமாக பெற்றுசென்றுள்ளபடியால் மேல்முறையீடு காலத்திற்கு பின்னர் வாகனத்தின் உரிமையாளரே நிரந்தரமாக வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. மேல் முறையீட்டு காலத்திற்கு

பிறகு வாகனத்தின் பிணைப்பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

18) எதிரிகள் ஏற்கனவே பிணையிலிருந்து வந்துள்ள நிலையில், மேல்முறையிட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லை எனில் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு எதிரிகளின் பிணைப்பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பு முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 30-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

N PREETHI

Digitally signed by N PREETHI
Date: 2026.04.02 10:41:13 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வானூர்.

<u>பின் இணைப்பு -</u>
<u>அரசுத்தரப்பு சாட்சிகள்</u>

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி.மீனா, காவல் ஆய்வாளர் |
| அ.சா.2 | திரு. பாண்டியன், தலைமை காவலர் |

<u>அரசுத்தரப்பு சாண்றாவணம்</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 20/04/2025 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.2 | 20/04/2025 | மதுபான பாட்டில்களின் புகைப்படங்கள் |
| அ.சா.ஆ.3 | 20/04/2025 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 13/05/2025 | படிவம் 91 (மதுபானபாட்டில்கள்) |
| அ.சா.ஆ.5 | 02/09/2025 | படிவம் 91 (இருசக்கரவாகனம்) |

<u>அரசுத்தரப்பு சான்று பொருள்</u> -

சா.பொ.1 TN-97-V-7952 என்ற எண் கொண்ட Hero Splendor plus இருசக்கர வாகனத்தின் புகைப்படம்

<u>எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுபொருள்</u> - இல்லை.

N PREETHI

Digitally signed by N PREETHI
Date: 2026.04.02 10:41:24 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வானூர்.